Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

அனுப்புநர்
திரு.க.மூக்கையா, பி.இ.,எம்டெக்.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
இனாம் கரூர், பழைய நகராட்சி கட்டிடம்,
கரூர் நகராட்சி பில் கலெக்சன் சென்டர்,
பெரியகுளத்து பாளையம்,
கரூர் மாவட்டம்-639 001.
E Mail id : ad.karur.dist@gmail.com
Ph.No: 04324-223625

பெறுநர்
செயல் அலுவலர்,
உப்பிடமங்கலம் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.

ந.க.எண்.1002/2021/கமா. நாள்.30.07.2021.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கரூர் மாவட்டம்- கரூர் வட்டம் - உப்பிடமங்கலம் பேரூராட்சி - உப்பிடமங்கலம் மேல்பாகம் கிராமம் - சர்வே எண்-713/5A-மில் 0.34.00உறக்டேர் (0.839ஏக்கர்) பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை:
1) மனுதாரர்கள் திருமதி.S.கல்யாணி (ம) T.பூங்கொடி கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் பெறப்பட்ட நாள்-22.04.2021, 21.06.2021, 08.07.2021 மற்றும் 22.07.2021.
2) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்-29.06.2021.
3) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்-19799/2020/போ, நாள்-24.12.2020 மற்றும் 08.02.2021.
4) மனுதாரர்கள் திருமதி.S.கல்யாணி (ம) T.பூங்கொடி கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் மூலம் தானப்பத்திரம் பெறப்பட்ட நாள்-08.07.2021
5) அரசாணை எண்-138, வீட்டுவசதி மற்ம் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-04.06.2004.
6) அரசாணை எண்-79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-04.05.2017.
7) அரசாணை எண்-18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-04.02.2019 மற்றும் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை, நாள்-31.01.2020.
8) அரசாணை எண்-141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(3)துறை, நாள்-23.09.2020.
9) அரசாணை எண்-181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(1)துறை, நாள்-09.12.2020.
10) அரசு கடிதம் எண்-19113/நவ4(3)/2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்-30.12.2020.
11) நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்-13686/2017/LA1, நாள்-08.09.2017.
12) வேளாண்மைத்துறை இணை இயக்குநர், கரூர் மாவட்டம் அவர்களின் கடிதம் எண்-இ1/3035/2021, நாள்-29.04.2021.

*****

...2

பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை(2)-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் நாள்-29.06.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை(4)-ல் கண்ட கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானபத்திர எண்-2704/2021, நாள்- 05.07.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **உவ/மா.ந.ஊ.உ இ(கமா) எண்-109/2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.
2) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்-9(ஈ) -ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.
4) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1) (a) பார்வை(9)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை(7)-ல் TNCDBR -2019-ல் விதி எண்-47 (11)-ன்படி மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் " Collecting the necessary fees including the charged for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" . After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issed to the applicant(s) directly.

(b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch. permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2) (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்-16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

...3

3) பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4) "The Tamil Nadu Government in G.O.Ms No: 112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have apprcved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority – ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5) பார்வை(6)-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனவே விதி எண்-3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐ யும் மற்றும் விதி எண்-9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6) பார்வை-(5) மற்றும் (9)-ல் காணும் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை (i) ரூ.4,200/- மற்றும் OSR கட்டணம் ரூ.15,300/- (நாள்-22.07.2021) அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(2 தொகுப்பு வரைபடங்கள்)

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

30/7/21

நகல்

1) மனுதாரர்கள் :
திருமதி.S.கல்யாணி (ம) T.பூங்கொடி,
நரிக்கட்டியூர், S.வெள்ளாளப்பட்டி(PO),
சணப்பிரட்டி கிராமம்,
கரூர் மாவட்டம்.

(பத்தி ஒன்று மட்டும்)

2) இருப்பு கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)
3) கோப்பு (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)
4) **Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA),**
No.1A, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, *Chennai* – 600008. (வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

உப்பிடமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : திரு.தி. சக்திவேல்,எம்.ஏ.,பி.எட்.

நக.எண்.149/ 2021 நாள் : 21.10.2021

பொருள் :	புதிய மனைப்பிரிவு – வரன்முறைப்படுத்துதல் – புதிய மனைப்பிரிவு - கரூர் மாவட்டம் - உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலம் மேல்பாகம் சர்வே எண்.713/5A (சக்தி நகர் விரிவாக்கம்) புதிதாக அமைந்துள்ள மனைப்பிரிவில் மனை எண்.1 முதல் 12 வரையில் மொத்தம் 12–மனைகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.	
பார்வை :	1.	அரசாணை (நிலை) எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.04.06.2004.
	2.	அரசாணை (நிலை) எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017.
	3.	அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் நநி(1) துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் நநி–(1) துறை நாள்.31.01.2020.
	4.	அரசாணை (நிலை) எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(1) துறை, நாள்.09.12.2020.
	5.	திருமதி.சு.கல்யாணி,க/பெ.பி.சுப்பிரமணி மற்றும் திருமதி.த.பூங்கொடி,க/பெ.தங்கராஜ் நிரிக்கட்டியூர், எஸ்.வெள்ளாளப்பட்டி அஞ்சல், சணப்பிரட்டி கிராமம் கரூர் மாவட்டம் என்பவர் உப்பிடமங்கலம் மேல்பாகம் கிராமம் புல எண்.713/5A (சக்தி நகர் விரிவாக்கம்) புதிதாக அமைந்துள்ள மனைப்பிரிவில் மனை எண்.1 முதல் 12 வரையில் மொத்தம் 12– மனைகளுக்கு ஒப்புதல் வழங்க நகர் ஊரமைப்பு துறைக்கு இணைதள விண்ணப்ப பதிவு எண்.202102501022304, நாள்.09.04.2021 மற்றும் 22.07.2021–ல் விண்ணப்பம் செய்துள்ளார்.
	6.	மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மாவட்டம் கரூர் வட்டம் அவர்களின் ந.க.எண்.1002/2021,கமா, நாள்.30.07.2021–ம் தேதிய கடிதம் மற்றும் ம.வ/மாந.ஊ.உ.இ.(கமா) எண். 109/2021, நாள்.30.07.2021 எண்ணிட்ட வரைபட ஒப்புதல்.
	7.	வரன்முறை கட்டணம் ரூ.101700/– நாள்.21.10.2021–ன் படி உப்பிடமங்கலம் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது.
	8.	வளர்ச்சிக் கட்டணம் ரூ169500/– இவ்வலுவலக செ.சீ.எண்கள்.373/2021 முதல் 384/2021 வரை நாள்: 21.10.2021–ல் வசூல் செய்யப்பட்டுள்ளது.
	9.	கூராய்வு கட்டணம் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) மனுதாரர் இவ்வலுலக செலுத்துச்சீட்டு எண்.385/2021 நாள்.21.10.2021 மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் (ரூ.1235000–க்கு 3%) நிலப்பயன் மாற்றக் கட்டணத் தொகை ரூ.37050/– (ரூபாய் முப்பது ஏழாயிரத்தி ஐம்பது மட்டும்) இவ்வலுலக செலுத்துச்சீட்டு எண்.386/2021 நாள்:21.10.2021–ல் வசூல் செய்யப்பட்டுள்ளது.
	10.	இப்பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.61/2021, நாள்.31.08.2021.

உத்திரவு:

பார்வை 1, 2 மற்றும் 3–ல் காணும் அரசாணைகளின்படியும், பார்வை 6–ல் காணும் கரூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி உப்பிடமங்கலம் மேல்பாகம் சர்வே எண்.713/5A (சக்தி நகர் விரிவாக்கம்) 2260 ச.மீ., பரப்பளவில் புதிதாக அமைந்துள்ள மனைப்பிரிவில் மனை எண்.1 முதல் 12 வரையில் உள்ள மொத்தம் 12 மனைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 4–ல் கண்டுள்ள தங்களது மனுவில் கோரியவாறும் பார்வை 7 மற்றும் 8–ல் கண்டுள்ளபடி வரன்முறை கட்டணம் மற்றும் அபிவிருத்தி கட்டணம் தங்களால் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, தங்களுக்கு சொந்தமான உப்பிடமங்கலம் மேல்பாகம் சர்வே எண்.713/5A (சக்தி நகர் விரிவாக்கம்) 2260 ச.மீ., பரப்பளவில் அமைந்துள்ள புதிய மனைப்பிரிவில் மனை எண். 1 முதல் 12 வரையில் உள்ள மொத்தம் 12 மனைகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மனையிடம் காலியிடமாக இருப்பின் கட்டிட அனுமதி பெற்ற பின்பு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
2. மனையில் கட்டிடம் கட்டப்பட்டிருப்பின் அதற்கு முறையாக உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து அனுமதி தனியே பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. மனையிட வரன்முறை அனுமதியை கட்டிட அனுமதியாக கருதக்கூடாது.
4. மனை தொடர்பாக தவறான ஆவணங்கள் சமர்ப்பித்திருந்தால் இவ்வுத்திரவு முன்னறிவிப்பு ஏதுமின்றி ரத்து செய்யப்படும்.
5. மனையிடத்திற்கு நிர்ணயித்த தொகை குறைவாக இருப்பின் நிலுவைத் தொகையினை செலுத்த வேண்டும்.
6. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மாவட்டம் அவர்களின் உத்திரவின்படி வழங்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள ஏற்கனவே, விற்கப்பட்ட தனித்த மனைக்கு மட்டும் இவ்வுத்திரவு பொருந்தும்.
7. மனுதாரர் மனையிடத்தில் உயர்மின் அழுத்தக்கம்பி / குறைந்த மின் அழுத்தக்கம்பி செல்லும் பட்சத்தில் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
8. நீர்நிலைப்பகுதி அரசு புறம்போக்கு பகுதி, வாய்க்கால் ஓடை , ஏரி, குளம், ஆறு, சாலை போன்ற இடங்களில் ஆக்கிரமிப்பில் உள்ள மனைக்கு இவ்வுத்தரவு செல்லத்தக்கது அல்ல.
9. நகர் ஊரமைப்புத் துறையாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பேரூராட்சிக்கு ஒப்படைக்காமல் அதில் அமையும், திறவிடம், பூங்கா, விளையாட்டுத்திடல் போன்ற இடங்களில் மனையிடம் அமைந்தால் மனை வரன்முறைப்படுத்த இயலாது. மேலும், பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பொது இடங்களை மறைத்து மனையிடமாக மாற்றி அமைந்திருந்தாலும், இவ்வுத்தரவு செல்லத்தக்கது அல்ல.
10. நகர் ஊரமைப்புத் துறையால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படாத நிலையில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் திறவிடங்கள் அப்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
11. அனுமதியற்ற மனைப்பிரிவு முழுமை / விரிவு அபிவிருத்தித்திட்ட பகுதியில் அமைந்திருந்தால் திட்டசாலைகள் மட்டும் பொதுஒதுக்கீடுகள் உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமையும் மனைகளை வரன்முறைப்படுத்தக்கூடாது.
12. நில உரிமை குறித்த வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.


செயல் அலுவலர்
உப்பிடமங்கலம் பேரூராட்சி,
கரூர் மாவட்டம்.
21.10.2024

பெறுநர்:

திருமதி.சு.கல்யாணி,க/பெயி.சுப்பிரமணி மற்றும் திருமதி.த.பூங்கொடி,க/பெ.தங்கராஜ் நரிக்கட்டியூர், எஸ்.வெள்ளாளப்பட்டி அஞ்சல், சணப்பிரட்டி கிராமம், கரூர் மாவட்டம்.

நகல்:

1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், இனாம் கரூர், குளத்துப்பாளையம், கரூர் மாவட்டம்.
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வெள்ளியணை.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate